11th March 1959]

Tractors

* 699 *Q.*—Sri A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of tractors available, district-war;

(*b*) the date of purchase;

(*c*) the number of tractors under repair and why the old ones have not been replaced;

(*d*) whether any new tractors were purchased recently; and

(*e*) the number of tractors condemned so far?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

Sri A. GOVINDASAMY : மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கிற விடைத்தாளில் 67 டிராக்டர்கள் ரிப்பேராக இருப்பதாகவும், 3 டிராக்டர்கள் கெட்டுவிட்டதால் கன்டெம் செய்யப்பட்டதாகவும் இருக்கிறது. ரிப்பேர் ஆகிவிட்ட டிராக்டர்களை மறுபடியும் ரிப்பேர் செய்ய அரசாங்கம் ஏன் நீண்ட காலம் எடுத்துக்கொள்ளுகிறது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சாதாரணமாக ஒரு டிராக்டரின் ஆயுள் காலம் 7 ஆண்டுகள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுகள் வரையில் டெப்ரிஷியேஷன் மதிப்பிடப்படுகிறது. சில டிராக்டர்கள் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன் 12 ஆண்டுகள் கூட ஆகின்றன. ரிப்பேர் செய்ய எந்தெந்த அளவு சாத்தியம் இருக்கிறதோ அந்தந்த அளவு செய்யப்படுகிறது. ரிப்பேர் செய்ய ஸ்பேர் பார்ட்ஸ் வேண்டும். ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. கிடைக்கும் அளவுக்கு ரிப்பேர் செய்து அவைகளை ஓட்டுவதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள 17 டிராக்டர்களில் எவ்வளவு உபயோககரமாக இருக்கிறது ? எவ்வளவு பழுதுபட்டிருக்கிறது.?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்த விவரம் என்னிடம் இல்லை.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த ஜாபிதாவில் பார்க்கும் போது 1953-ம் வருஷத்திற்கு மேல் எந்த டிராக்டரும் வாங்கப்படவில்லை. அதுவும் 142 டிராக்டர்கள் தான் காணப்படுகின்றன. அதனால் நிறைய டிராக்டர்களை உபயோகப்படுத்தும்படியான நிலையில் இங்கே விவசாய மக்கள் இல்லை என்பது புலனாகிறது. இவைகளை உபயோகப்படுத்தி பெரிதும் பயன் படுத்த என்ன முயற்சி அரசாங்கம் எடுத்துக் கொள்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : டிராக்டர்களை அதிக மாக உபயோகப்படுத்த விவசாயிகள் முன் வருகிறார்கள். ஆனால் புதிதாக டிராக்டர்களை வாங்குவதிலே தயக்கம் இருக்கிறது. முன்பே குறிப்பிட்டது போல ஒரு டிராக்டரின் ஆயுட் காலம் 7 ஆண்டுகள் தான். 7 ஆண்டு களுக்கு டெப்ரிஷியேஷன் எல்லாம் போட்டு, மூலதனத்திற்கு உரிய வட்டி போட்டு, ஸ்பேர் பார்ட்ஸுக்கு 4 சதவீதம் போட்டுப் பார்த்தால் லாபம் வருவ தில்லை. லாபமும் வேண்டாம், நஷ்டமும் வேண்டாம் என்று தான் இப்போதே போட்டிருக்கிறோம். இருந்தாலும் நஷ்டம் வருகிறது. அத னால் தான் மேற்கொண்டு டிராக்டர்கள் வாங்கவில்லை. ஹயர் பர்சேஸ் ஸிஸ்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு வருஷத்திற்கு 10 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது பயன்படுத்தப் பட்டு வருகிறது. அரசாங்கம் டிராக்டரை வாங்கி வைப்பது லாபகரமாக

---

[a] Printed as Appendix IV on page 94 infra.

இல்லை. விவசாயிகள் ரொம்ப வேண்டுமென்கிருர்கள். ரஷ்யாவிலே கூட சென்ட்ரல் டிராக்டர் ஆர்கனேஸேஷன் வேலை செய்வதிலே 10 வருஷம், 9 வருஷம் ஆயுள் காலம் என்று இருந்தாலும் 3 வருஷத்திற்குள் பிரயோசனமில்லாமல் போய்விடுகிறது என்று கருதி கூட்டுறவு சங்கங் களுக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Mr. SPEAKER : இந்தக் கேள்வி மீது உப கேள்வி போட அநேக அங்கத்தினர்கள் கைதூக்குகிருர்கள். கேள்வி நேரம் 9–30 மணிக்கு மேல் போனுல் மான்யக் கோரிக்கை காலம் குறைந்து போய் விடும். ஆகையால் இதைப் பற்றி மான்யக் கோரிக்கை வரும்போது பேசவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் அனுமதி கொடுப்பது கஷ்டம் தான் என்று நினைக் கிறேன். அடுத்த கேள்வி.

[Sri S. M. Annamalai rose . . .]

Mr. SPEAKER : இன்னும் என்ன சொல்லப்போகிறீர்கள் ? இன்னும் பதிலளிக்க வேண்டிய கேள்விகள் 31 இருக்கின்றன. அதனுல், நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமானுல் மான்யக் கோரிக்கையின் மீது பேசும்போது சொல்லலாம். மூலக் கேள்வி போட்ட கனம் அங்கத்தினர் ஏதாவது கேள்வி கேட்கவேண்டும் என்று சொன்னுல், அதில் அர்த்தம் உண்டு. நீங்கள் எப்படிக் கேட்க முடியும் ? ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களே மேற்கொண்டு கேள்விகள் இதில் கேட்காமலிருக்கும்போது, அதற்குமேல் நீங்கள் சொல்லவேண்டுமானுல் மான்யக் கோரிக்கையின்போது சொல்லுங்கள்.

Training centres in Carpentry

*** 700 *Q.*—Sri P. G. MANICKAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவில் தச்சுவேலை பயிற்சி கொடுப்பதற்காக சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வ ளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே தச்சுவேலைப் பயிற்சி சாலைகள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

(ஈ) இவர்களுள் எத்தனை பேர் ஹரிஜனங்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 27,980.

(*b*) Karadibavi, Pollachi and Periyanaickenpalayam.

(*c*) One hundred and forty-nine.

(*d*) Thirty-two.

Sri P. G. MANICKAM : ஹரிஜனங்களில் ஒரு சிலர்தான் இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப் படிப்பட்ட தொழிற் பயிற்சி அனேக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டால் தான் பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைய முடி யும். ஆகையால், இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியிலே 50 சதவிகிதமாவது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட சர்க்கார் கவனம் செலுத்துமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பயிற்சிக்கு வருகின்ற வர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனுல், நிர்ப்பந்தம் பண்ண முடியாது. 149 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அதில் 32 பேர்கள் ஹரிஜன கள் என்ற தகவல் கொடுத்திருக்கிறேன். இன்னும் அதிகமான எண் ணிக்கையில் ஹரிஜன மக்கள் வந்தால் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படு வார்கள்.